# கோவிட் -19 தொற்று பரவலின் எதிரொலியாக ஜூலை 27 ஆம் தேதி முதல் ப்ராம்ப்ட்டன் பேருந்து சேவையில் மாற்றங்கள், மற்றும் மூத்தகுடிமக்களின் அடையாள அட்டைகளுக்கான புதிய ஆன்லைன் விண்ணப்ப செய்முறை

ப்ராம்ப்ட்டன், ON (ஜூலை 21, 2020) – நகரத்தை மீண்டும் திறப்பது மற்றும் மீட்சி பெறுவதற்கான திட்டத்தின் ஒரு அங்கமாக, ஜூலை 27 திங்கட்கிழமை தொடங்கி, அடுத்த அறிவிப்பு வரும் வரை பேருந்து சேவைகள் பின்வருமாறு மாற்றப்படும்.

**சேவைகளில் மாற்றங்கள்**

ப்ராம்ப்ட்டன் போக்குவரத்து பேருந்து வழித்தடங்கள் ஜூலை 27 ஆம் தேதி முதல் இயங்கும்; இது நமது நகரின் மக்களை, நமது பேருந்து போக்குவரத்துக் கட்டமைப்பானது, திறம்பட இடம் விட்டு இடம் கொண்டு செல்ல வைப்பதை உறுதி செய்வதற்கேயாகும்.

- 501 ஸூம் க்வீன்
- 502 ஸூம் மெயின்
- 511/511A ஸூம் ஸ்டீல்ஸ்
- 1/1A க்வீன்
- 2 மெயின்
- 3 மெக்லாலின்
- 4/4A சிங்க்வாகவ்ஸி
- 5/5A பொவெய்ர்ட்
- 6 ஜேம்ஸ் போட்டெர்
- 7/7A கென்னடி
- 8 சென்ட்டர்
- 9 வோட்டென்
- 10 சவுத் இண்டஸ்ட்ரியல்
- 11/11A ஸ்டீல்ஸ்

- 14/14A டோர்ப்ரம்
- 15 ப்ரமீலியா
- 18 டிக்ஸீ
- 20A ஈஸ்ட் இண்டஸ்ட்ரியல்
- 23 ஸாண்டல்வுட்
- 26 மவுண்ட் ப்ளெஸண்ட்
- 29 வில்லியம்ஸ் பார்க்வே
- 30 ஏர்போர்ட் ரோட்
- 31 மெக்வீன்
- 35 க்ளார்க்வே
- 50 கோர் ரோட்
- 51 ஹியர்ஃபோர்ட்
- 52 மெக்மர்ச்சி
- 53 ரே லாஸன்
- 56 கிங் நோல்
- 57 சாரோலெய்ஸ்
- 60 மிஸ்ஸிஸ்ஸாக
- 115 பியர்ஸன் ஏர்போர்ட் எக்ஸ்ப்ரஸ்

தற்போது புழக்கத்தில் உள்ள சேவைகள் மற்றும் அவற்றின் கால அட்டவணைகளைப் பார்வையிட, வருகை தரவும்: www.bramptontransit.com

ப்ரமீலியா, ப்ராம்ப்ட்டன் கேட்வே மற்றும் டவுண்டவுன் பேருந்து முனையங்கள் காலை 6 முதல் இரவு 9 மணி வரை பணியாற்றும் என்பதை நினைவூட்டுகிறோம். ட்ரினிட்டி காமன் பேருந்து முனையம் மூடப்பட்டே இருக்கும். பேருந்து முனையங்களின் வாடிக்கையாளர் சேவை நேரங்களை அறிய வருகை தரவும்: www.bramptontransit.com.

**மூத்தகுடிமக்களின் அடையாள அட்டைகளுக்கான புதிய ஆன்லைன் விண்ணப்ப செய்முறை**

ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து மூத்தகுடிமக்களின் அடையாள அட்டைகளுக்காக அந்தந்த மூத்தகுடிமக்கள் இப்போது ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம். www.bramptontransit.com, இல் இருக்கின்ற ஆன்லைன் படிவத்தை பூர்த்தி செய்து, அத்துடன் வயதுக்கான அத்தாட்சி, ப்ராம்ப்ட்டன்

நகரவாசி என்பதற்கான ஆதாரம் மற்றும் புகைப்படத்தை இணைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்; இவை அடையாள அட்டையில் உபயோகிக்கப்படும். அதன் பின்னர் அடையாள அட்டையானது அஞ்சல் மூலமாக விண்ணப்பதாரருக்கு அனுப்பி வைக்கப்படும்.

செயல்பாட்டில் இருக்கின்ற மூத்தகுடிமக்கள் அடையாள அட்டைகளின் காலாவதி காலமானது, தேதி குறிப்பிடாமல் தள்ளி வைக்கப்பட்டுள்ளது. மூத்த குடிமக்கள் அடுத்த அறிவிப்பு வரும் வரை தங்கள் காலாவதியான அட்டைகளையே தொடர்ந்து பயன்படுத்தலாம்.

மூத்தகுடிமக்கள் எவரேனும் தங்களின் ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து மூத்தகுடிமக்கள் அடையாள அட்டைகளைத் தொலைத்துவிட்டு, அதற்கான மாற்று அட்டை தேவையானால், அவர்கள் மூத்தகுடிமக்கள் அடையாள அட்டைக்கான திட்ட அலுவலகத்தை 905-874-2750 ext. 16253 இல் அணுகி தங்கள் மாற்று அட்டைகளைப் பெறுவதற்கான அறிவுரைகளைப் பெறலாம்.

**கோவிட்-19 (COVID-19) பாதுகாப்பு நடவடிக்கைகள்**

மேம்படுத்தப்பட்ட கால அட்டவணைப்படி பேருந்துகளைத் தூய்மைப்படுத்தி அவற்றில் கிருமிநாசினி தெளிக்கும் வேலை மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு 48 மணிக்கொரு முறை பேருந்துகளின் அனைத்து மேற்பரப்புகள், இயக்குபவர் அமருமிடம் மற்றும் அனைத்து இருக்கைகளையும் கிருமிநாசினி தெளித்து சுகாதாரமாக வைப்பதே ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து சேவையின் இலக்காகும். தற்சமயம் பெரும்பாலான பேருந்துகளில் 24 மணி நேரத்திற்கு ஒருமுறை கிருமிநாசினி தெளிக்கப்படுகின்றது. பேருந்து முனையங்கள் மற்றும் நிறுத்தங்களில் உள்ள மேற்பரப்புகளும்கூட தினசரி அடிப்படையில் தூய்மைப்படுத்தி கிருமிநாசினி தெளித்து சுகாதாரமாக வைக்கப்படும்.

பேருந்து முனையங்களில் மற்றும் பேருந்து நிறுத்தங்களில் பயணிகள் முகக் கவசங்களை அணிந்திருந்தாலும் கூட உடல்ரீதியான சமூக விலகலைக் கடைப்பிடிக்குமாறு நகர நிர்வாகம் வலியுறுத்துகிறது. பேருந்து பயணியர் தங்கள் கைவசம் தமது உபயோகத்திற்காக இதுபோன்ற கிருமி நாசினி, கைகளைக் கழுவும் சுகாதார பொருட்களை வைத்திருந்து தங்கள் கைகளை அடிக்கடி கழுவி சுத்தமாக வைத்திருக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் மற்றும் இருமுதல் , தும்முதலின்போது தங்கள் முழங்கைகளில் முகம் புதைத்து இருமவோ தும்மவோ செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். நீங்கள் உடல்நலம் இல்லாது இருந்தால், பேருந்தில் பயணிப்பதைக் கைவிட்டு, அருகாமையில் இருக்கின்ற கோவிட்-19 மதிப்பீட்டு மையத்தில் சோதனைசெய்துகொண்டு, பொதுச் சுகாதார அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்.

பீல் ப்ப்ளிக் ஹெல்த் அமைப்பின் வழிகாட்டுதலின் பேரில், பேருந்துகளிலும் பேருந்து முனையங்களிலும் மருத்துவம் அல்லாத முகக் கவசம் அணிவது கட்டாயம் என்பது பயணிகளுக்கு நினைவூட்டப்படுகிறது.

ஆபத்துக்களை தொடர்ந்து கண்காணிப்பதற்காக, ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமானது, பீல் பப்ளிக் ஹெல்த் மற்றும் ப்ராம்ப்ட்டன் அவசரநிலை மேலாண்மை அலுவலகம் ஆகியவற்றுடன் நெருக்கமாக செயல்படுகிறது.

வழக்கமான புதுப்பிப்புகளுக்கு www.brampton.ca/covid19 ஐப் பார்வையிடவும், www.bramptontransit.com க்கு வருகை தரவும் அல்லது சேவை புதுப்பிப்புகளுக்காக ட்விட்டரில் @bramptontransit ஐப் பின்பற்றவும். கேள்விகள் ஏதுமிருப்பின் ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து அமைப்பின் தொடர்பு மையத்தை 906.874.2999 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் பரிமாற்றம்
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca